# 15

## நாமகரணமற்ற கிறிஸ்தவம்:

# வேதாகமத்தில் "ஞானஸ்நானப்படுத்துதல்"

"ஞானஸ்நானப்படுத்துதல்" (baptize) என்ற வார்த்தையைப் பற்றி நமது படிப்பில் நாம், இது இரட்சகரால் பயன்படுத்தப்பட்ட கிரேக்க வார்த்தையின் மொழிபெயர்ப்பு அல்ல, ஆனால் அந்த வார்த்தையானது மொழிபெயர்ப்பின்றி ஆங்கிலத்தில் அப்படியே எடுத்தாளப்பட்டது என்று நாம் கற்றறிந்தோம். மதி நுட்பம் வாய்ந்த உலகின் புலமைத்துவமானது இந்த வார்த்தையை ஏன் இவ்விதமாய்க் கையாள வேண்டும் என்பதைத் தேவன் மட்டுமே அறிகின்றார். இந்த வார்த்தை பற்றிய அறிவுக் குறைவானது இதை மொழிபெயர்க்கத் தவறுவதற்குக் காரணமாயிற்று என்று கூற முடியாது என்பது நிச்சயமாகும்.

ஒருவேளை, வேத வசனங்களின் முற்கால ஆங்கில மொழிபெயர்ப்பிலிருந்து தோல்வியின் வரலாறு ஒன்றைக் கேட்டறிவது ஆர்வத்திற்குரியதாயிருக்கும். இந்தக் கிரேக்க வார்த்தைக்கு மொழிபெயர்ப்பாளர்கள் ஒரு எளிய ஆங்கிலோ - சாக்ஸன் வார்த்தையை நமக்குக் கொடுத்திராதது ஏன்? மனிதர்களுடைய இருதயங்களின் இரகசியம் யாவும் அவரால் அறியப்பட்டு, அவர்களின் செயல்களுக்கான காரணங்கள் அவருடைய கரங்களால் "சுவர் மீது" எழுதப்பட்டுள்ள பொழுது, நாம் கடந்து போன ஆண்டுகள் முழுவதிலும் உலகின் நாமகரணத்துவத்தைப் பாதுகாப்பதற்காக இந்த கிரேக்க - ஆங்கில வார்த்தையினால் முற்றிலும் பாரப்பட்டு விட்டோம் என்பதைக் காண்போமோ என்று நான் சந்தேகப்படுகின்றேன். இதைப் பற்றி நினைத்துப் பாருங்கள்: இந்த வார்த்தைக்கு நாம் ஒரு மொழிபெயர்ப்பைக் கொண்டிருந்தால், நாம் பின்வருமாறு வாசித்திருப்போம்:

> விசுவாசமுள்ளவனாகி, அமிழ்த்தப்பட்டவன், மூழ்கடிக்கப்பட்டவன், ஆழ்த்தப்பட்டவன் அல்லது மேற்கொள்ளப்பட்டவன், இரட்சிக்கப்படுவான்.
>
> இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து ... அமிழ்த்தப் பட்டு, மூழ்கடிக்கப்பட்டு, அல்லது ஆழ்த்தப்பட்டு, உன் பாவங்கள் போகக் கழுவப்படு.
>
> ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும்

*சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஊஆவியின் நாமத்திலே அவர்களை அமிழ்த்தி, முழுக்காட்டி அல்லது ஆழ்த்தி ...*

*மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அமிழ்த்தப்படுங்கள், மூழ்கடிக்கப்படுங்கள் அல்லது ஆழ்த்தப்படுங்கள்.*

*ஞானஸ்நானத்திற்கு "தெளித்தலை"யும் "ஊற்றுதலையும்" பதிலாகத் தரும் உபதேசத்திற்கு இது என்ன ஒரு வெளிப்பாடாக உள்ளது! அவர்களுக்கு எவ்விதத் தற்காப்பு வாதம் மேற்கொள்ளப்பட முடியும்? இதனால்தான் இவ்வார்த்தை மொழிபெயர்க்கப்படாதிருந்ததா? இது ஊற்றுதலையும் தெளித்தலையும் இவ்வுலகில் பற்றிக் கொண்டுள்ள மாபெரும் புகழ்பெற்ற மனிதர்களின் உபதேசங்களையும் நடைமுறை களையும் காப்பாற்றுவதற்காகவா? நேர்மையான இருதயங்கள் பதில் அளிக்கட்டும்.*

*இருந்த போதிலும், மனிதர்களைக் காட்டிலும் தேவன் அதிகம் ஞானமுள்ளவராயிருக்கின்றார். ஒவ்வொரு பந்தயத்திலும் அவர்களை அவர் வென்றிருக்கின்றார்; அவர்களை அவர் ஒவ்வொரு யுத்தத்திலும் தோற்கடித்திருக்கிறார். அவர்கள், நமது இரட்சகரால் பயன் படுத்தப்பட்ட இந்த வார்த்தைக்கு ஒரே ஒரு மொழிபெயர்ப்பைக் கூடக் கொடுக்கத் தவறியிருந்தாலும், வாசிக்கின்ற எவரும் புரிந்து கொள்ளும்படி தேவன் அதன் அர்த்தத்தை மிகத் தெளிவாக நிலைநிறுத்தியுள்ளார். நமது கர்த்தருடைய இரத்தத்தை நோக்கி நடத்திச் செல்லும் படிகளில் எதுவும் ஒரு வார்த்தையின் அர்த்தத்தைச் சார்ந்திருப்பதில்லை என்பதற்காக தேவனு க்கு நன்றி. இயேசுவின் மூலமாக வாழ்வின் இந்த நெடுஞ்சாலை யானது, மனிதர்கள் சாக்குப்போக்குக் கூற முடியாதபடிக்கு மிகத் தெளிவாக்கப்பட்டுள்ளது. நாம் அவருடைய சித்தத்தை அறிய விரும்பினால் அதை அறிந்து கொள்ளுவோம்.*

*ஒருவேளை, இப்பொழுது நாம், "baptize" என்பது ஆங்கிலமாக்கப் பட்ட கிரேக்க வார்த்தை என்ற குறிப்பிட்ட உண்மையை அறியாதிருக் கிறோம் என்று வைத்துக் கொள்வோம். ஒருவேளை நாம் கிரேக்க மொழியை ஒருக்காலும் கேள்விப்பட்டிருந்ததில்லை மற்றும் இயேசு ஆங்கிலம் தவிர வேறு மொழி எதுவும் பேசினார் என்று அறிந்திருந்ததில்லை என்று வைத்துக் கொள்வோம்: நாம் இந்த வார்த்தையின் அர்த்தத்தைக் கற்றுக் கொள்ள முடியுமா? மற்றும் ஞானஸ்நானம் பெற என்ன செய்ய வேண்டும் என்பதை நாம் இவ்விதமாகக் கற்றுக் கொள்ள முடியுமா? ஒருவர் தமிழ் புதிய ஏற்பாட்டை எடுத்துக் கொண்டு, அதன் மூலம் தம்முடைய கீழ்ப்படிதலை நிச்சயப்படுத்திக் கொள்ள முடியுமா? மிக உறுதியாகவே முடியும். ஞானஸ்நானம் கொடுக்கவென்று பரலோகத்தினால் அனு ப்பப்பட்ட முதல் மனிதர் யோவான் ஸ்நானன் ஆவார். வேறு எந்தத் தனி மனிதரைக் காட்டிலும் இவர் அதிகமான மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்திருக்க வாய்ப்பு உள்ளது. நூற்றுக்கணக்கான ஆத்துமாக்களுக்கு இந்த முதல் ஞானஸ்நானமானது வரலாற்றுப் புகழ் பெற்ற யோர்தான்*

*நதியில் நடைபெற்றது. சொல்லப் போனால், மக்கள் பலர், "தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, யோர்தான் நதியில் அவனால் ஞானஸ்நானம் பெற்றனர்" (மத். 3:6). மேலும் நாம், "... இயேசு கலிலேயாவிலுள்ள நாசரேத் தூரிலிருந்து வந்து, யோர்தான் நதியில் [eis; "into"] யோவானால் ஞானஸ்நானம் பெற்றார். அவர் ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, வானம் திறக்கப்பட்டதையும், ஆவியானவர் புறாவைப் போல் தம்மேல் இறங்குகிறதையும் கண்டார்" (மாற். 1:9, 10) என்றும் வாசிக்கின்றோம். எனவே, முதல் ஞானஸ்நானப்படுத்துதல் என்பது "ஒரு நதிக்குள்" நடைபெற்றது என்பதில் சந்தேகம் இல்லை; மக்கள் நதியில் (into) ஞானஸ்நானம் பெற்றனர். இயேசு தண்ணீரில் இருந்து வெளியே வந்தார். இந்த உண்மைகள் "தெளித்தல்," "ஊற்றுதல்" அல்லது "முழுக்காட்டுதல்" இவற்றில் எதனுடன் இசைவாய் உள்ளது என்பதை நேர்மையான இருதயம் முடிவு செய்யட்டும். அது எதுவாய் இருந்திருக்க முடியும்? நீங்கள் முடிவு செய்யும்படியாகத் தேவன் அழைக்கின்றார். தேவனுக்கு எவ்விதம் கீழ்ப்படிவது என்பதை நீங்கள் அறியும்படிக்கு அவர் உங்களுக்காகச் சித்திரங்களை வரைந்துள்ளார்.*

*இன்னொரு எடுத்துக்காட்டை நாம் சிந்தித்துப் பார்ப்போம்:*

> *அப்பொழுது பிலிப்பு பேசத் தொடங்கி, இந்த வேத வாக்கியத்தை முன்னிட்டு, இயேசுவைக் குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான். இவ்விதமாய் அவர்கள் வழிநடந்து போகையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி: இதோ தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான் ... அவன் ... இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள்; பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங் கொடுத்தான் (அப். 8:35-38).*

*இது தனிமையான வனாந்தரச் சாலையின் வழியே பயணம் செய்த இரு மனிதர்களைப் பற்றிய நிகழ்ச்சியாக உள்ளது. அங்கு செய்யப்பட்டது என்ன என்பது பற்றிய நமது கண்ணோக்கத்தைத் தடை செய்ய அங்கு கூட்டம் இல்லை. பிரசங்கியார் தம் கடமையில் கருத்தாயிருந்து, இயேசுவைப் பற்றித் தம் பயணத் துணைவருக்குப் பிரசங்கித்தார். அவர்கள் தங்களின் பயணத் தைத் தொடருகையில், பிரசங்கிக்கப்பட்ட மனிதர் - பிரசங்கித்தவரல்ல - தண்ணீர் உள்ள இடத்தில் நின்றார். மிகவும் எதிர்பாராத வகையாக காணப் படும் விதத்தில், அவர் பிரசங்கியாரை நிறுத்தி தண்ணீரை நோக்கி அவரது கவனத்தைத் திருப்பினார், மற்றும் தாம் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இரதம் நிறுத்தப்பட்டது, மற்றும் இரு மனிதர்களும் இரதத்தில் இருந்து இறங்கி, "தண்ணீருக்குள் இறங்கிச்" சென்றார்கள். அந்த மந்திரி ஞானஸ்நானம் பெற்றார், மற்றும் அவர்கள் இருவரும் - பிலிப்பு மற்றும் மந்திரியும் - "தண்ணீரிலிருந்து கரையேறி னார்கள்." இந்தச் சித்தரிப்பில் "தெளித்தலை" அல்லது "ஊற்றுதலை" காண்பதற்கு நேர்மையான இருதயம் எவ்வளவு நேரம் நோக்கிக் கொண்டிருக்க வேண்டும்? பரிசுத்த ஆவியானவரால் இயக்கப்பட்ட இந்த*

*நிகழ்ச்சியைக் கவனித்த பிறகு தேவன் செய்யும்படி விரும்புகின்றதைச் செய்ய நோக்கம் கொள்ளும் இருதயமானது ''தெளித்தல்'' அல்லது "ஊற்றுதல்" என்பதில் திருப்தியடைந்திருக்க முடியுமா?*

*ஞானஸ்நானம் பற்றித் தேவனுடைய பரிசுத்த ஆவியானவரால் நமக்குத் தரப்பட்டுள்ள கூடுதலான (மற்ற) சித்தரிப்புக்களை நாம் ஆராய்ந்து பார்ப்போம்:*

> *... கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? ... அவருடைய மரணத்திற் குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம் (ரோமர் 6:3, 4).*

> *ஞானஸ்நானத்திலே அவரோடேகூட அடக்கம் பண்ணப் பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடே கூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள் (கொலோ. 2:12).*

> *துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர் களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத் தோடும் சேரக்கடவோம் (எபி. 10:22).*

*பவுல், தாமும் ரோமாபுரியின் சபையார் யாவரும் ஞானஸ்நானத்தின் மூலம் ''அடக்கம்பண்ணப்''பட்டிருந்ததாகக் கூறினார். கொலோசெயர் ஞானஸ்நானத்தில் "அடக்கம்பண்ணப்"பட்டிருந்ததாகவும் அவர் கூறினார். மெத்தடிஸ்ட் சபையைத் தோற்றுவித்தவரான ஜான் வெஸ்லி என்பவர், ரோமருக்கு பவுல் எழுதிய நிருபத்தின் இவ்வசனப் பகுதியில் ''முழுக் காட்டுதல் மூலம் ஞானஸ்நானப்படுத்தும் பழங்கால வழக்கத்தைக்'' குறிப்பிட்டதாகக் கூறினார். எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், ஞானஸ்நானத்தை கழுவுதலாகச் சித்தரித்திருந்தார்.*

*புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானத்துடன் தொடர்புடைய இந்த உண்மைகளை நாம் ஆழ்ந்த சிந்தனையுடன் மறுகண்ணோட்டமிட்டுக் கவனிப்போம்:*

1. *முதல் ஞானஸ்நானமானது நதியில் செய்விக்கப்பட்டது.*
2. *இயேசு யோர்தான் நதிக்குள் ஞானஸ்நானம் பெற்றார்.*
3. *இயேசு தாம் ஞானஸ்நானம் பெற்ற பிறகு தண்ணீரில் இருந்து மேலேறி வந்தார்.*
4. *பிலிப்பும் மந்திரியும் தண்ணீரினுள் சென்றனர்.*
5. *தண்ணீரில் இருக்கையில் மந்திரி ஞானஸ்நானப் படுத்தப்பட்டார்.*
6. *ஞானஸ்நானத்திற்குப் பிறகு பிலிப்பும் மந்திரியும் தண்ணீரில்*

இருந்து கரையேறி வந்தனர்.

7. ரோமாபுரியில் இருந்த சபையார் யாவரும் மற்றும் கொலோசெயில் இருந்த சபைக்குழுவும் கூட, பவுல் உட்பட ஞானஸ்நானத்தில் அல்லது ஞானஸ்நானத்தின் மூலம் அடக்கம் பண்ணப் பட்டிருந்ததாகப் பவுல் கூறினார்.
8. எபிரெய சகோதரர்கள்/சகோதரிகள் யாவரும் சுத்த ஜலத்தினால் தங்கள் சரீரங்கள் கழுவப்பட்டிருந்தனர் என்று அவர்களுக்குக் கூறப்பட்டது.

கிரேக்கமோ அல்லது கிரேக்கமில்லாததோ, நேர்மையான எந்த இருதயமும், புதிய ஏற்பாட்டுப் பிரசங்கியார்களும் போதகர்களும் மக்களை ஞானஸ்நானப் படுத்திய பொழுது என்ன செய்தார்கள் என்பதைக் காணத்தவற முடியாது. பதிமூன்று நூற்றாண்டுகளாக முழுக்காட்டுதல் என்பதே அகில முழுவதிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதை நினைவில் வையுங்கள்; ஞானஸ்நானத்திற்கு (இதைத் தவிர) வேறெதுவும் மறுக்கப்பட்டது. கிறிஸ்தவ உலகம் முழுவதும் ஒரு ஆயிரம் ஆண்டுகள் அளவாக ஞானஸ்நானத்தின் (இந்த) செயல்பாட்டில் ஒன்றிணைந்து இருந்ததால், இந்த நடைமுறை மாற்றத்திற்கு யாரோ ஒருவர் பொறுப்பாளியாயிருந்திருக்க வேண்டும் என்பது ஞானமுள்ள கூற்றாக உள்ளது. ஒரு ஆயிரம் ஆண்டுகள் அளவாக முழு உலகமும் இந்த வார்த்தையின் அர்த்தத்தைத் தவிறவிடவில்லையென்பது நிச்சயம்; ஏவுதல் பெற்ற மனிதர்கள் இந்தக் கட்டளைக்கான தங்களின் கீழ்ப்படிதலில் வழி நடத்தப்பட்டார்கள் என்பது நிச்சயம். இந்த விஷயத்தை நான் நேர்மைக்கு விட்டு விடுவேன். விவாதத்திற்குரிய இக்கேள்வியில் நாமும் ஒருவராயிருப் போமோ? இதை இயேசு வேண்டுகோள் விடுக்கின்றார், பரிசுத்த ஆவியானவர் கேட்டுக் கொள்கின்றார், மற்றும் அப்போஸ்தலர்களின் காலத்தினுடைய போதனை முழுவதும் இதை வற்புறுத்துகின்றது. இயேசுவினிமித்தமாக நாம் சத்தியத்தை ஆராய்ந்து, அதை ஏற்றுக் கொள்வோமா?